செ.வெ.எண்.200/2020 நாள்: 04.03.2020

**கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 2 நாட்கள் உள்ளூர் விடுமுறை -**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலை ஷேக் பீர் முகம்மது சாகிப் ஒலியுல்லாஹ்(ராலி)ஆண்டு விழாவினை முன்னிட்டு 09.03.2020 (திங்கள்) மற்றும் மண்டைக்காடு அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில் மாசிக்கொடை விழாவினை முன்னிட்டு 10.03.2020 (செவ்வாய்) அன்று கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**(2)** 09.03.2020 அன்று அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூர் விடுமுறைக்கு ஈடாக 2020 மே மாதத்தில் இரண்டாவது சனிக்கிழமை (09.05.2020) அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு வேலை நாளாக இருக்கும்.

**(3)**10.03.2020 அன்று அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூர் விடுமுறைக்கு ஈடாக 2020 ஜீன் மாதத்தில் இரண்டாவது சனிக்கிழமை (13.06.2020) அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு வேலை நாளாக இருக்கும்.

**(4)** 09.03.2020 மற்றும் 10.03.2020 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் தலைமைக் கருவூலம் மற்றும் கிளைக் கருவூலங்கள் அரசு ஈடுபாடு சம்பந்தப்பட்ட அவசரப் பணிகளைக் கவனிக்கும் பொருட்டு, தேவையான பணியாளர்களைக் கொண்டு இயங்கும் என கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது.

**(5)**அரசுப் பள்ளித்துறை சார்பில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அரசு தேர்வுகளுக்கு எவ்வித இடையூறுமின்றி கல்வி நிறுவனங்கள் தேவையான பணியாளர்களை கொண்டு இயங்கும் எனவும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப., அவர்களால் உத்தரவிட்டுள்ளார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.